Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

3 MAY 1972
UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

வார மலர்

மலர் 14 | ரபி. அவ் 8 | சித்திரை 11 | ஞாயிற்றுக்கிழமை | (23—4—72) | இதழ் 73




## ஆள்பதிவு அடையாள அட்டை

# விண்ணப்பப்படிவங்கள் நாளை முதல் வடக்கில் விநியோகம்

### மாலை 4-30 தொடக்கம் 7-30 மணிவரை வீடுகளில் இருக்குமாறு ஆலோசனை

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆள் பதிவுக்கான அடையாள விண்ணப்பப் படிவ விநியோகம் நாளையிலிருந்து ஆரம்பமாகிறது. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் முறையை உறுதிப்படுத்தும் உத்தியோகஸ்தர்கள் மக்களுக்கு விளக்குவார்கள் என்றும், அவர்களின் வேலையைச் சிறப்புடன் செய்ய உதவுமாறு பொதுமக்களை ஆள் பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. சி. பெ. னம்பலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட சகல மக்களுக்கும் அடையாள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவது தெரிந்ததே. இன மொழி சாதி வேறுபாடின்றி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்படி யாழ். மாவட்டத்தில் ஆள் பதிவுக்கான விண்ணப்பங்கள் நாளையிலிருந்து விநியோகிக்கப்படும். இலங்கையருக்குமட்டுமன்றி சட்டபூர்வமான அத்தாட்சி வைத்திருக்கும் வெளிநாட்டவர்கள் வாசகால பெர்மிட் வைத்திருக்கும் பிறநாட்டவர்களுக்கும் இவ்வடையாள அட்டைகள் வழங்கப்படுமென ஆள் பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு சி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை உறுதிப்பத்திர உத்தியோகஸ்தர்கள் நாளையிலிருந்து வீடுவீடாகச் சென்று விநியோகிப்பார்கள். இவர்கள் இந்த விண்ணப்பங்களை விநியோகிப்பதற்கு வசதியாக 18 வயதுக்குமேற்பட்ட சகலபொதுமக்களையும் மாலை 4-30 மணியிலிருந்து 7-30 மணி வரை தமது வீடுகளில் இருக்குமாறு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள வடமராட்சி தெற்கு மேற்கு

(12-ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக்காவலில் இருந்த சமசமாஜ எம். பி. விடுதலை

(கொழும்பு நிருபர்)

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கடந்த ஒருவருட காலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமசமாஜக்கட்சி எம். பி யான திரு வாசுதேவ நாணயக்காரா இன்று விடுதலை செய்யப்பட்டார்.

அவர் கடந்தவருடம் ஏப்ரல்மாதம் நடந்த வன்செயல் இயக்கத்தின்போது கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் ஆளும் கட்சியில் ஒன்றான சமசமாஜக்கட்சியின் இளம் துடிப்புள்ள தலைவர்களில் ஒருவரும், சமசமாஜ வாலிப முன்னணியின் தலைவருமாவார்.

33 வயதான இவ்விளைஞர் சமசமாஜ மத்தியக் கமிட்டியில் இருந்து செல்வாக்குள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. பரிஸ்டரான இவர் 1970-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். தடுப்புக்காவலில் இவர் வைக்கப்பட்டிருந்தபோது மூன்று மாதத்துக்கொருமுறை லீவு வழங்கப்பட்டமையால் தொடர்ந்தும் இவர் ஆட்சிமன்ற உறுப்பினராக இருக்கின்றார். (ச)

## நிலவில் 2-வது இரவை நிம்மதியாகக்கழித்தனர்

ஹூஸ்டன், ஏப். 22 சந்திரனில் இப்போது தங்கியிருக்கும் அப்பலோ-16 வீரர்கள் இருவரும் இரண்டாவது இரவில் இன்று நிம்மதியாகத் தூங்கினார்கள்.

வீரர்கள் இருவரும் முதலாவது சந்திர உலா ஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்தனர். அப்போது வீரர்கள் ஜோன் யங்கும், சார்ல்ஸ் டியூக்கும் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டனர். இந்தக் காட்சியை டெலிவிஷனில் லட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர். ஒருவ ரோசடு ஒ வர் வேகமாகப் பேசியும் கொண்டனராம்.

இரண்டாவது சந்திரத்தரை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு முன்னதாக இரண்டாவது இரவை நிம்மதியாகத் தூங்கிக்கழித்தார்கள். இரண்டாவதுதடவை யில் வீரர்கள் பலசாகசம் நிறைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வர்.

## சங்கத்தலைவருக்கு 'அலவன்ஸ்' வழங்குவது சாத்தியமில்லை

### பதில் நிதியமைச்சர் பதில்

[நமது நிருபர்]

'தென்னிலங்கையிலுள்ளது போல் இங்கும் கள்ளுத் தவறணை ஏலவிடப்பட்டவர்களுக்கு ஏலத்தில் விட்டிருந்தால் சுமார் 180 லட்சரூபா பெற்றிருக்கமுடியும். கள்ளும் பத்திவிற்பனவுச் சங்கங்களுக்குக் கொடுத்ததால், இதில் சால்பங்குதான் கிடைத்துள்ளது. இதனை சங்கத்தினர் உணர்ந்துபார்க்க வேண்டும்'.

யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் கள்ளுத் தவறணை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பதில் நிதி அமைச்சர் திரு. லெஸ்லீ டி. சொய்சா மேற்கண்டவாறு கூறினார்.

வடபகுதியிலுள்ள 29 கள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள், கட்டாக் கள்ளுத்தவறணை ஏலத்தொகையை சரி அரைவாசியாகக் குறைக்கும் மகஜர்மூலம், அமைச்சரை கோரியிருந்தனர். கள்ளுத் தவறணைகளை சுமார் 50 லட்சம் ரூபாவிற்கு சங்கத்தினர் ஏலமெடுத்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்குமுகமாக பதிலமைச்சர் லெஸ்லி டி. சொய்சா கூறியதாவது: தென்னிலங்கையைப்போல் இங்கும் கள்ளுத்தவறணைகளைத் தனிப்பட்டவர்களுக்கு ஏலத்தில் விட்டிருந்தால் சில தொழிலாளர்களுக்கும், மதுஅருந்துவோருக்குமே அதிக

(12-ம் பக்கம் பார்க்க

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




டாலர்
அலுமினியம்

## மரண அறிவித்தல்

### திரு. தம்பு தில்லைநாதன்

திரு தம்பு தில்லைநாதன் [மலாயன் பென்ஷனர்] சாவகச்சேரி அவர் அபிராமிப்பிள்ளையின் அருமைக் கணவரும் திரு சிவநாதன், திருமதிகள் புஸ்பராணி திடவீரசிங்கம், இராஜேஸ்வரி நமசிவாயம், புனிதவதி சிவசந்திரா, செல்வி இந்திராணி ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார். அந்தாரின் சமைக்கிரியைகள் 23-4-72 ஞாயிற்றுக்கிழமை நண்பகலளவில் நடைபெறும்

உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 4135

# உண்மையான சோஷலிஸ்ட் யார்?

ஸோஷலிஸம்!

ஆகா! இந்தச் சொல்லுக்குத்தான் நம் நாட்டில் இப்போது எவ்வளவு மந்திர சக்தி ஏற்பட்டிருக்கிறது. எங்கே திரும்பினாலும், இதுவே நம் காதில் விழுகிறது. மூன்று நாளாய்ப் பட்டினி கிடக்கும் ஏழையும் 'வாழ்க சோஷலிஸம்' என்று சொல்லிக்கொண்டு கூத்தாடுகிறான். பெரும் பணக்காரர்களும் அதை ஆதரிப்பதுபோல ஏப்பம் விட்டுக்கொண்டே, அவர்களுடன் சேர்ந்து கைதட்டுகிறார்கள். முடியிழந்த அரசர்களும் மெதுவாய் எட்டிப்பார்த்துக்கொண்டே, அச்சத்துடன் 'நாங்கள் எப்போதோ சோஷலிஸ்டு ஆகிவிட்டோமே இப்போது எங்களிடம் எதுவுமில்லை' என்கிறார்கள். ஆண்டிகளும் கடவுளைத் துதிப்பதை விட்டு 'ஒளிமயமான சோஷலிஸ எதிர்காலமே வருக! வருக!!' என்கிறார்கள்.

என்ன இது-சோஷலிஸம்? எல்லோர் தலைக்கும் பொருந்தக்கூடிய குல்லாயா, அல்லது டெயிலின் சட்டையா?

அல்ல, அல்ல. அப்படியானால் பின் என்ன?

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் புராணங்களிலும் இதிகாசங்களிலும் சொர்க்கம் முக்கிய இடம் வகித்து வந்தது. கவிஞர்களும் கதைசொல்லும் பாகவதர்களும் அதை ஓர் அழகிய ஓவியமாக நம்மனக்கண் முன் காட்டுவார்கள். பூவுலகில் நல்லது செய்து, விண்ணுலகில் சொர்க்கத்தை அடையவேண்டுமென்று மக்கள் விரும்பினார்கள். ஆனால் அந்தச் சொர்க்கத்தின் சிறப்பு, இப்போது மயங்கி மறைந்து விட்டது. அந்த இடத்தை சோஷலிஸம் வகிக்கிறது. ஆகவே நம் அரசியல்வாதிகள் இந்தத் தலத்தின் சிறப்பைப் பற்றி மேடைகளில் ஓயாது பேசி வருகிறார்கள்.

சோஷலிஸத்தைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் அதை வாழ்வில் கடைப்பிடிப்பவர்கள் அரிதாயிருக்கிறார்கள்.

## யூதேய சோஷலிஸ்ட்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் யூதேயநாட்டில் ஒரு சோஷலிஸ்ட் இருந்தார். பரம ஏழை. பூவுலகில் கடவுளின் ராஜ்யம் ஏற்படப்போவதாகச் சொல்லிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்தார். அப்பொழுது ஒருவன் அவரை அணுகி, 'போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டான்.

'பிறன்மனை நயவாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக' என்றார் ஏசு பெருமான்.

இதைக்கேட்ட அவன், 'இவற்றையெல்லாம் சிறுவயதுமுதலே நான் பின்பற்றி வருகிறேன்' என்றான்.

'அப்படியானால் இன்னுமொரு குறை இருக்கிறது. உன்னிடம் இருப்பவற்றையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு. அப்போது என்னைப் பின்பற்றிவா' என்றார் கருணை வள்ளல்.

இதைக் கேட்டதும் அவன் மிகுந்த துக்கமடைந்தான். ஏனென்றால் அவன் பெரும் பணக்காரன்.

அவனுடைய நிலைமைக் கண்டார் தேவகுமாரர். 'செல்வர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! பணக்காரர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைக்காட்டிலும், ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்' என்றார்.

இந்தக்காலத்தில் மலர் சோஷலிஸத்தைப்பற்றிப் பேசுவதை நினைக்கும்போது அன்று ஏசு பெருமான் கூறிய இந்த அருள்வாக்கே நம் நினைவுக்கு வருகிறது.

ஊசியின் காதிலேயே ஒட்டகம் நுழைவதுகூட எளிதாயிருக்கும். ஆனால் அரண்மனை போன்ற இச்சைகளும் கார்களும் வைத்திருப்பவர்கள் சோஷலிஸ அரசை ஒருநாளும் அமைக்க முடியாது-பேச்சை நிறுத்திவிட்டு வாழ்வில் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்விதம் வாழ்வில் கடைப்பிடித்த ஒரே ஒருசோஷலிஸ்ட்-சில ஆண்டுகளுக்குமுன் நம்மிடையே வாழ்ந்தார். அவர்தான் காந்தி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஒருநாள் ஒருசிறுமி அவரைப் பார்த்து, 'பாபு' நீங்கள் சட்டை போட்டுக் கொண்டால் என்ன? என் அம்மாவை உங்களுக்கு ஒரு சட்டை தைத்துக்கொடுக்கச் சொல்லட்டுமா?' என்றாள்.

இதற்குக்காந்தி என்ன சொன்னார் தெரியுமா?

'ஓ' போட்டுக்கொள்கிறேன். ஆனால் எனக்கு நாற்பதுகோடி சகோதரர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் சட்டை தைத்துக் கொடுக்க உன் அம்மாவினால் முடியுமானால், நானும் சட்டை போட்டுக்கொள்கிறேன்' என்றார்.

## உண்மையான சோஷலிஸ்ட்

அவர் ஒரு சோஷலிஸ்ட்-உண்மையான சோஷலிஸ்ட். ஏழைகளின் துன்பத்தைக் கண்டு காந்தி நெஞ்சம் உருகினார். அவர்களுடைய கண்ணீரையெல்லாம் துடைக்க அவர் முயன்றார். தம்மால் அது முடியாதபோது, தாமும் அவர்களது துயரத்தைப் பகிர்ந்துகொள்ள அவர்களைப்போல ஆனார். இதில் ஒரு விந்தை என்னவென்றால் முதலில் சோஷலிஸத்தைப்பற்றி அவருக்கு எதுவும் தெரியாது; தெரியாமலே அந்தத் தத்துவத்தைப் பின்பற்றி வந்தார். பல ஆண்டுகளுக்குப்பின் ஜவஹர்லால் நேரு இந்தப் புதிய சித்தாந்தத்தில் அவருக்குக் குருவானார். அவரிடமிருந்து கேட்டறிந்ததும் காந்திஜிக்கு ஒரு ஐயம் உண்டாயிற்று 'இதெல்லாம் சரி ரஷ்யாவில் இது எப்படி நிகழ்ந்தது? செல்வர்கள் மனம் திருந்தித் தங்கள் உடைமைகளைத் துறந்தார்களா?' என்று கேட்டார்.

நேரு சிரித்தார். 'இல்லை, அது பீரங்கி முனையில் நிகழ்ந்தது. ரத்தப்புரட்சி!' என்றார்.

காந்தியின் முகம் சுருங்கிற்று! இவ்வளவுதானா? அப்படியானால் அதில் என்ன சிறப்பு இருக்கிறது? என்றார். அப்புறம் அவர் எதுவும் பேசவில்லை; யோசனையில் மூழ்கினார்.

## இரு புரட்சிகள்

காந்தி இம்சையை வெறுத்தார். இரத்தம் சிந்தாமலே புரட்சிசெய்யமுடியுமென்று கருதினார். ஒரு புரட்சிமட்டுமில்லை இரு புரட்சிகள் செய்ய முடியுமென்று கூறினார் ஒன்று, அகப்புரட்சி, மற்றொன்று புறப்புரட்சி, இதில் புறப்புரட்சியைக்காட்டிலும் அகப்புரட்சியையே அவர் முக்கியமானதாய்க் கருதினார் இந்திய அரசியலில் புகுந்த காலம் முதல்கொண்டு அவர் இதில் கண்ணாயிருந்தார். அகத்திலே புரட்சி செய்து மனிதனைத் திருத்தாமல் புறப்புரட்சி செய்து அதில் வெற்றியடைந்தாலும் உண்மையான பலன் ஏற்படாதென்று அவர் கருதினார். ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றலாம். எஜமானர்கள் மாறுவார்கள் குப்பனுக்குப்பதில் சுப்பன் வருவான். ஆனால் மக்களுக்கு நல்வாழ்வு முக்கியமாக, உரிமை-கிடைக்காது.

ரஷ்யப் புரட்சி இதற்கு ஒரு பாடம். அது மகத்தானது; வரலாறு கண்டறியாதது. முதலாளித்துவத்தையும் அது அடியோடு ஒழித்தது. [illegible]த்தையும் அழித்தது. ஆனால், அப்புறம் என்ன நிகழ்ந்தது?

நல்ல சமுதாயம் உருவாயிற்று?

நல்ல மனிதன் உருவானானா?

கனவு நனவாயிற்றா?

இல்லை பொதுவுடைமையின் முக்கியக் குறிக்கோள்கள் மண்ணுக்கடியிலே புதைக்கப்பெற்றன. புரட்சியை நடத்தியவர்கள் வெற்றி கிடைத்ததற்குப் பிறகு ரத்த வெறியில் ஒருவர் குரல்வளையை மற்றொருவர் பிடித்துக்கொண்டார்கள் மாஸ்கோவிலும் பிறநகரங்களிலும் உதிர வெள்ளம் ஓடிற்று. சோவியத் பாட்டாளிகள், உழவர்கள், போர்வீரர்கள் முதலியோரிடம் ஆட்சியதிகாரம் முழுவதையும் ஒப்படைக்கக் கருதியிருந்தார் லெனின். ஆனால் அது நிறைவேறவில்லை. மக்களை வழிநடத்திச் சென்றவர்கள், உழைப்பாளிகளின் பெயரால் தாங்களே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

எந்தப் பலாத்காரப் புரட்சிக்கும் ராணுவமே கருவியாக இருந்திருக்கிறது. இதை நாம் சரித்திரத்தில் காணலாம். ராணுவத்தின் மூலம் ஆதிக்கத்துக்காக நடக்கும் போராட்டத்தின் முடிவில் ஒரு சர்வாதிகாரமே உருவாகும்.

ரஷ்யாவில் புரட்சி நடந்து அரை நூற்றாண்டாகிறது. அந்நாடு பெரிதும் முன்னேறியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் இது கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தின் மூலமே நிகழ்ந்தது.

'நம்நாட்டில் தொழிலாளருக்குள்ள சாதாரண உரிமைகூட ரஷ்யத் தொழிலாளருக்கு இல்லை' என்கிறார் சோஷலிச நிபுணரான ஜயப்பிரகாஷ் நாராயணன்.

“...அகத்திலே புரட்சி செய்து மனிதனைத் திருத்தாமல் புறப்புரட்சி செய்து அதில் வெற்றி பெற்றாலும் உண்மையான பலன் ஏற்படாது...”

## மனிதன் மாறுதவரை

இதற்குக் காரணம், முன்பு கூறியதுதான் மனிதன் மாறுதவரை, அரசியல்பீடத்தையோ பொருளியல் பீடத்தையோ மாற்றிப்பயனில்லை. ஏனென்றால் அதிகாரத்தை ஏற்று அரசையும் பிறவற்றையும் நடத்துபவன் மனிதனே. முதலில் அவன் திருந்த வேண்டும். புறத்தை மட்டும் திருத்துவதால் நன்மை எதுவும் விளையாது.

இங்கே யேசுநாதருடைய அருள்மொழி ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒருநாள், அவர் தாம் உண்பதற்கு முன் கைகழுவவில்லை. இதை ஒரு பரிசேயன் கண்டான் அவனுக்கு இது வியப்பை அளித்தது. அப்போது கர்த்தர் அவனை நோக்கி, 'பரிசேயராகிய நீங்கள் போஜனபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள் உங்கள் உள்ளத்திலோ கொள்ளையும் பொல்லாப்பும் நிறைந்திருக்கின்றன. மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர், உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா?' என்று கடிந்தார்.

ஆகவே அகம் திருந்த வேண்டியது இன்றியமையாதது ஆனால் இதற்காக புறப்புரட்சியை அவர் நிறுத்திவைக்கவில்லை. ஒருபுறம் அகப்புரட்சி செய்துகொண்டே, மற்றொருபுறம் புறப்புரட்சியும் செய்தார்.

அகப்புரட்சி செய்து மனிதனைத் திருத்துவது எளிதல்ல காந்தி இதற்காக மாபெருஞ் சக்தி வாய்ந்த ஓர் ஆயுதத்தைத் தமக்குத் துணையாய்க் கொண்டார். அதுவே, அஹிம்சை-அன்பு.

மனிதனிடமுள்ள ஓர் இயல்பு என்னவென்றால் அவனைக் கட்டாயப்படுத்தி நாம் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் அப்போது அவனுடைய உடம்பு நமக்குக் கீழ்ப் படியும்; ஆனால் உள்ளம் ஒருநாளும் கீழ்ப்படியாது. இதனத்தில் அதிருப்தியடையாத வரையில், அவனை நாம் மாற்றிக்கொண்டுவிட்டதாய் எப்படிச் சொல்லமுடியும்...? ஆனால், அன்புவழி இதற்கு மாறானது.

வீணையை நல்லமுறையில் மீட்டினால் அற்புதமான இசை பிறக்கிறது. காந்தி, மனிதனுடைய இதய வீணையை மீட்டினார்; அற்புதமான முறையில் மீட்டினார். அதன் விளைவாக, விடுதலைப் போராட்டத்தில் பல அதிசயங்களை நிகழ்த்தினார் கொலைஞர்களும் கள்வர்களும்கூட அவருடைய அன்பிலே மயங்கிச் சிறைபுகுந்தார்கள். நாம் சுதந்திரம் அடைந்தோம். ஆனால்-

புரட்சி முடியவில்லை. ஆழ்கடலில், இடியிலும் புயலிலும் நம்மை வழிநடத்திச் சென்ற மீகாமன் மறைந்துவிட்டார். ஆயினும் என்ன? இந்திய மரபுக்கேற்ற முறையில், சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாக வைத்து, காந்தியின் கருத்திற்கிணங்க, ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நாம் அமைக்க முடியும். அதற்கு முதலில் நாம் செய்ய வேண்டியது ஒன்று உண்டு.

ஏசுநாதரைப் பார்த்து ஒருவர் “ஆண்டவனின் ராஜ்யம் எங்கேயிருக்கிறது?” என்று கேட்டார். அதற்கு ஏசு, “அது எங்கேயோ இல்லை; உன்னுக்குள்ளேயே இருக்கிறது” என்றார்.

காந்தியும் இதேவிதம் கூறியுள்ளார். ஒருநாள் ஒரு தொண்டர் அவரைநோக்கி, 'பாபுஜி, ஸோஷலிசத்தை எப்படி அடைவது?' என்று கேட்டார்.

“சகோதரரே, அது எளிது. மிகஎளிது. உம்முடைய வாழ்க்கையை நீர் மாற்றியமைத்துக்கொண்டால், அப்போதே ஸோஷலிஸம் தொடங்கிவிட்டதாய்ப் பொருள்” என்றார்.

இதைக்கேட்டுத் தொண்டர் வியப்புற்று நின்றார். காந்தி தம் கருத்தை விளக்கினார். “இது கணக்கில் '1' என்று எழுதுவதைப்போல ஆகும். இதன்று(1) இருந்தால், இதன்பின் பூஜ்யங்களைச் சேர்த்துக்கொண்டே போகலாம். முதல்பூஜ்யத்தினால், ஒன்று பத்தாகும்; அதன்பின் நாம் சேர்க்கும் ஒவ்வொரு பூஜ்யத்தினாலும் எண்ணின் மதிப்புப் பத்துப் பத்து மடங்காகப் பெருகிக்கொண்டுபோகும். இப்படிச் செய்யாமல், முதலில் வெறும் பூஜ்யம் மட்டும் இருந்தால்-அதாவது யாரும் தத்தலப்படி நடக்காவிட்டால்-பின்பு எத்தனை பூஜ்யங்கள் சேர்த்தாலும், அவற்றின் மதிப்பும் பூஜ்யமாகவே இருக்கும் அவற்றை எழுதுவதற்காகும் நேரமும் அவை எழுதப்பெறும் காகிதமும் வீண்.”

காந்தி இதைக் கூறிவிட்டு, “என்ன, தெரிந்துகொண்டீரா?” என்று தொண்டரைக் கேட்டார்.

(12-ம் பக்கம் பார்க்க)

“...மனிதன் மாறுதவரை அரசியல் பீடத்தையோ பொருளியல் பீடத்தையோ மாற்றிப் பயனில்லை...”

# நம்பிக்கையா? பகுத்தறிவா?



சுவாமி சாந்தானந்தா

['நம்பிக்கை நல்லதா? பகுத்தறிவு நல்லதா? இவை இரண்டும் ஒரு பறவையின் இறக்கைகள் போல. இதில் ஒன்று இல்லாவிட்டாலும் பயனில்லை, இரண்டும் ஒன்றுக்கொன்று பலமளிப்பதாகும்; பகுத்தறிவு மட்டும் இருந்து நம்பிக்கையில்லாவிடில் அது வெறும் வரட்டுப் பேச்சாகும். வாழ்வுக்குப் பயனில்லை. பகுத்தறிவின்றி, வெறும் நம்பிக்கைமட்டுமிருப்பின் அது மூடநம்பிக்கையாகிப்பலரும் ஏமாற்றிவிடக்கூடும்' என்றிவ்வாறு சுவாமி சாந்தானந்தா அவர்கள் யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் சென்றவாரம் பேசுகையில் குறிப்பிட்டார் அவர் பிரசங்கத்தின் சுருக்கமிது ]

ஒருவர் ஒரு கோவிலுக்குப் போனார். 'ஓ கடவுளே! கடவுள் என்று ஒருவர் இருந்தால், என் ஆன்மாவைக் காப்பாற்றும்! ஆன்மா என்று ஒன்று இருந்தால்' என்று பிரார்த்தனை செய்தால் எப்படி இருக்கும்? நம்பிக்கையில்லாமல் செய்யும் பிரார்த்தனை இப்படித்தான். இப்படி பிரார்த்தனைசெய்தால் பலன் கிடைக்கமுடியுமா? நம்மில் பலருக்குக் கடவுள்மீது முழு நம்பிக்கையில்லை. நோய் வரும்போதும், கஷ்டங்கள் வரும்போதும் பிரார்த்தனை செய்து மற்றக் காலங்களில் கடவுளைப்பற்றி நினைப்பதுமில்லை.

பகுத்தறிவு என்றால் என்ன? இது மனிதனுக்கு கடவுள் அளித்த ஒரு வரப்பிரசாதமாகும். மனிதப் பிறவிகிடைப்பது மிக அரிது. 84 லட்சம் பிறவிகளுக்குப் பின்தான் மனித ஜன்மம் கிடைக்குமாம். மனிதப் பிறப்புக்கிடைத்தாலும் 8 லட்சம் ஜன்மங்களில் மிருகம்போல்தான் பகுத்தறிவின்றி இருப்போமாம். இப்படி ஜெயின சித்தாந்தம் கூறுகிறது.

நாம் சாப்பிடுகிறோம். தூங்குகிறோம். பிள்ளைப் பெறுகிறோம். சாகிறோம். மிருகங்களும் அப்படியே செய்கின்றன. இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லாவிட்டால் அது வெறும் மிருக வாழ்வாகவே இருக்கும். பகுத்தறிவால், நாம் எங்கு இருந்து வந்தோம்? ஏன் பிறந்தோம்? மரணத்துக்குப்பின் என்ன? இந்த மனிதப்பிறவியின் நோக்கமென்ன? இவ்விதம் சற்றே அமைதியாக இருந்து நமக்குள் நாமே கேட்டுக்கொண்டு புத்தி சக்தியைப் பயன்படுத்தி விசாரணை செய்ய ஆரம்பிக்கும் போதுதான் ஆத்மீக வாழ்வு ஆரம்பமாகிறது. இவ்வித விசாரணைக்குத் திருப்திபான பதில் கிடைக்கும்வரை நம் மனதுக்கு நிம்மதியிராது. கொடும் வெயிலில் போட்ட புழுவைப்போல பதிலுக்காகத் துடிதுடிப்போம்.

ஒருவர் ஒரு பெரியவரிடம் சென்று கடவுளை எப்படிக் காணலாம் என்று கேட்டார். காட்டுவதாகச் சொல்லி பெரியவர் அவரை ஒரு குளத்துக்கு அழைத்துச் சென்றார் அவரது தலையை தண்ணீருக்குள் அமுக்கினைத்தார் மூச்சுவிடமுடியவில்லை. திணறினார். பெரியவர் அவரை வெளியே எடுத்து தண்ணீருக்குள் இருக்கையில் எப்படி உணர்ந்தீர்கள்? என்று கேட்டதும் 'மூச்சுவிட வேண்டுமென்று ஒரே ஒரு ஆர்வம்தான் இருந்தது' என்று பதில் அளித்ததும். கடவுளை உணரவும் அவ்வித ஆர்வமும் வைராக்கியமும் வேண்டும். அப்போதுதான் நாம் கடவுளை உணரமுடியும். நமக்கு அவ்வளவு வைராக்கியமும் ஆர்வமும் இருக்கிறதா?

கடவுளிடம் நாம் எதையும் கேட்கலாம், அவரிடம் கேட்பதுபோல் மோட்சத்தையும் கேட்கலாம் ஐஸ்வரியத்தையும் கேட்கலாம். இரண்டும் அவர் அளிப்பார். கஷ்டம் வரும்போதுதான் அவரை நினைக்கிறோம். கஷ்டம் தீர்ந்ததும் நன்றி மறக்கிறோம். இதுதான் கூடாது. கஷ்டம் இருந்தாலும் இராவிட்டாலும் கடவுளை மறக்காமல் நம்பிக்கையுடன் இருப்பதே முதல்தரமான வைராக்கியமாகும்.

சாப்பிட உட்கார்ந்ததும் 'இந்த உணவுபெற எனக்கு என்ன தகுதி?' என்று கேட்கிறோமா? ஒரு கப் காப்பியும், ஏன் நாம் விடும் ஒவ்வொரு மூச்சும்கூட கடவுளின் அருள் அல்லவா? ஒவ்வொரு மூச்சுவிடும்போதும் நாம் அவருக்கு நன்றி தெரிவிப்பதாயின் நமக்கு முணுமுணுக்க நேரம் ஏது?

சமய சாஸ்திரங்கள் ஞானிகள் தமது தெய்வீக அனுபவத்தால் நமக்குத் தந்துள்ள அரும் செல்வங்கள். தாயுமானவர் முதலிய ஞானிகளின் அருள் பாடல்களுக்கும், பணத்துக்காகச் சிலர் பாடும் பாடல்களுக்கும் அதிக வித்தியாசமுண்டு. தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகள் தெய்வ அருளால் கிடைத்தவை. அவை தெய்வீக வாக்குகள், தாயுமானவர் முதலிய அருளாளர்களைக் கருவிகளாகக் கொண்டு. இறைவன் அளித்த வாக்குகளாகும்.

கடவுள் நமது மனோவாக்குக்கு எட்டாத சித்துருவாய் இருக்கிறார் என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. சிவனிலிருந்து சிவனைப் பிரித்துவிட்டால் அது சவம். சவத்துடன் சிவன் சேர்ந்தால் அது சிவனாகும். இது சாதாரண உடல், உள்ளே சிவ சக்தி இருப்பின் சவமும் ஜீவனாகும்.

நமது பகுத்தறிவால் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ள முடியாது. இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஞானிகளின் அருள் வாக்குகளும் ஆன்ம விசாரமும் தேவைப்படுகின்றது. இதற்கு அசைந்திடா நம்பிக்கை வேண்டும். அகந்தை பிடித்த முட்டாள் பகுத்தறிவுவாதிகளா இதை உணர்வதற்கில்லை. தங்கள் 'பகுத்தறிவால்' எல்லாம் அறிந்து கொள்ள முடியுமென்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# மன நோயாளருக்கு வாழ்வளித்த வள்ளல்

ஆ. பேரின்பநாதன் R. M. N. (Cey)

[பருத்தித்துறை அரசினர் பொது மருத்துவமனை]



டாக்டர் அருளம்பலம்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் டாக்டர் தா. அருளம்பலம் அவர்களின் வாழ்வும் நாற்பத்திரண்டே ஆண்டில் அமைந்துவிட்டது. அவரது தந்தை கவியாசான் காட்டிய வழிநின்று வாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் வைத்தியக் கல்லூரி சென்று வைத்தியரானார்.

## ஆற்றிய சாதனைகள்

என் பயிற்சிக்காலத்தில் அமரரின் மாணவனாயும் சேவைக்காலத்தில் அவருடன் வேலைசெய்யும் பாக்கியம் கிடைத்த ஊழியன் என்றவகையிலும் கடந்த நாலரை ஆண்டுகளில் அன்னார் ஆற்றிய சாதனைகளை ஒருசில பற்றியும் அன்னாரின் பெருங்குணங்களில் நாம் பின்பற்றவேண்டிய சிறப்பான அம்சங்கள் சிலவற்றை இங்கு கூறவிரும்புகிறேன்.

16 படுக்கைகளுடன் மந்திகை வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட மனநோயாளர் மனநலவிடுதி இன்று 34 படுக்கைகளைக் கொண்டதாய் இயங்குவதுடன் வாரத்தில் இருநாட்கள் வெளிநோயாளர்களைப் பார்வையிடும் நிலையமாயும் இயங்குகிறது. அண்மையில் காங்கேசன்துறையிலிருந்து தெல்லிப்பழைக்கு மாற்றப்பட்ட அரசினர் வைத்தியசாலையில் 64 படுக்கைகளைக் கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய மனநோயாளர் விடுதியுண்டென்றால் அதன் பெருமை அமரரின் அயரா உழைப்பென்றால் மிகையாகாது. அத்துடன் இங்கும், வாரமிரு நாட்கள் வெளிநோயாளர்களை முன்புபார்வையிட வசதி செய்திருந்தார். யாழ். பெரியாஸ்பத்திரியில் இடவசதியின்மையால் வாட்டுகள் அமைக்க வசதிகிடைக்காத போதும், அங்கும் வாரமிரு நாட்கள் வெளிநோயாளர்களைப் பார்வையிட வசதி செய்திருந்தார். இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற இடங்களுக்கும் சேவைசெய்ய வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தார் செயல் வடிவாகுமுன்னே காலனைழைத்துவிட்டார்.

மனநோயாளர்களை உலகம் சமூகத்தில் ஒருபிரஜையாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் (Social Stigma) தாழ்வுணர்வைத் தகர்த்தெறிய எத்தனையோ பாடுபட்டார்.

அண்மையில் மதுரையில் நடைபெற்றஉலக மனநோய் வைத்தியர்கள் மகாநாடொன்றில் அமரர் வழங்கிய சொற்பொழிவு வெளியீடொன்றின்படி கடந்த நாலரை ஆண்டுகளில் வடமாநிலத்தில் மட்டும் 9000 மனநோயாளர்களுக்கு மேல் சிகிச்சைபெற்றுள்ளனர். அவர்களில் 3,600 பேர் மட்டில் சோர்வுக்கோளாறு நோயினாலும் (Manic Depression) 3 300க்கும் அதிகமானோர் முரண் மூளைக்கோளாறு நோயினாலும் (Schizophrinic) ஏறக்குறைய 2, 00 பேர்மட்டில் மற்றவகை மனநோயாளராகவும் சிகிச்சைபெற்றுள்ளனர்.

அமரரின் மனநோயாளர் புனர்வாழ்வுத்தொண்டு பலவகையான சூழ்நிலைகளினாலும், சந்தர்ப்பவசத்தாலும் நோயினாலும் உத்தியோகத்தை இழக்கும் நிலையிலிருந்த எத்தனையோ அரசாங்க ஊழியர்கள் அமரரின் சிபார்சினாலும், சிகிச்சையினாலும் மீண்டும் வேலை செய்கின்றனர்.

## திறமை

மனநோய் வைத்தியத் திறமையில் இலங்கையில் அவருக்கு நிகர் அவர்தான் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். அவர் புகழ் இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலும் பரவியிருந்தது என்பதற்கொரு சிறு உதாரணம். மனநோயால் வாடிய மலாயாவைச் சேர்ந்த மாதுவின் உறவினர் ஒருவர் கேள்வியுற்று இலங்கைக்குக் கொணர்ந்து அமரரிடம் சிகிச்சைபெற்றுக் குணமடைந்து மீண்டார் என்றால் வேறு என்ன சான்றுவேண்டும் அமரரின் நிபுணத்துவத்திற்கு. டாக்டர் எளிமையானவாழ்க்கையைநடாத்தினார். 'அன்பான வார்த்தை என்னும் அருமருந்து ஒன்றினால் நோயாளிகளைக் குணப்படுத்தினார். மனமே என்று உண்டென்பதற்குச் சரியான ஆதாரமில்லாதபோது மனநோய்பற்றிஅறிந்து சிகிச்சை செய்தனர். மனிதர்களைக் மனநோயாளருடன்சலிப்புத் தட்டாது உரையாடி அவர்களின் நடைமுறைகள், எண்ணங்களின் தொடர்பு நாட்டங்கள் என்பனவற்றைச் சிலேடையான கேள்விகளின்மூலம் அனுகி நோயினை அனுமானித்துக் கொண்டுசிகிச்சையளித்தார்.

இப்படியாகவும் இன்னும் பலவாகவும் மனப்பாங்கிலும், மனநோய்நிபுணத்துவத்திலும் தன்னிகரற்று ஒளிர்ந்த மாமேதையின் மறைவு வைத்திய உலகுக்கு மட்டுமன்றித் தமிழ்கூறும் நல்லுலகிற்கே ஈடுசெய்யமுடியாதபேரிழப்பாகும். அன்னாரின் புகழுடல் வையமுள்ளளவும்வாழும் என்பதுடன் அவரின்வாழ்க்கையின்ஒவ்வொரு நோக்கும் யாமனைவரும் பின்பற்றவேண்டிய அரும்பெருந் தன்மைகள் நிறைந்தவையாகும்.

# ஈழத்துக் கலைஞர்களை இணையவைத்த பெருவிழா!

## புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். செய்த சாதனை!!



புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு தலைநகரில் இருநாட்கள் பெருவிழா எடுக்கப்பட்டது. 'படவுலகின் முடிசூடா மன்னன்-எங்கள் அண்ணனுக்கு விழா எடுக்கிறோம், வாருங்கள் வாருங்கள்!' என்று அழைப்பு விடுத்தார்கள் அகில இலங்கை எம். ஜி ஆர். ரசிகர் மன்றத்தினர்.

இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் கொழும்பு லேயட்ஸ் பிராட்வேயிலுள்ள நாராயண குரு மண்டபத்திலும், வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் விழா நடந்தது. முதல் நாள் விழா மகாநாடாகவும், அடுத்தநாள் விழா கலைவிழாவாகவும் இடம் பெற்றது.

'மஞ்சள் குங்குமம்' படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்த நாடறிந்த "மக்கள் கலைஞர்" எம். உதயகுமார் தான் அகில இலங்கை எம். ஜி. ஆர். மன்றத்தலைவர் கேட்கவேண்டுமா? பொது செயலாளர் ஏ. நெய்னார். இவர்களுடன் ஆனந்தா புரக்ஷன்ஸாரும் சேர்ந்து கொண்டு விழா சிறப்புற உழைத்தார்கள் என்றும் கேட்கவேண்டுமா? இனி வி செல்லையாவுடன், 'ஆர்ரவுண்டர்' எம். எம். மக்கீனும் இணைந்து கொண்டு "மக்கள் திலகத்'தின் விழா சிறப்புற அமைய உழைத்தனர்!

முதல்நாள் பேருரைகளும் சிறப்புரைகளும் கூடியிருந்தவர்கள் நெஞ்சங்களில் புதுப்புதுக் கருத்துக்களைப் புகுத்தியதுடன் உள்ளத்தைத் தொட்டு சிந்திக்கவைக்கும் கருத்துக்களை அள்ளித் தந்தனர்.

### முழக்கம்

'நாடு உயர கலைஞர்களின் பணி' என்று ஒருவர் உரையாற்றினார். 'நாடும் நாமும்' என்று முழங்கினார் மற்றவர். 'நாடும் ஏடும்' என்று சொற்பெருக்காற்றினார் இன்னொருவர். எம். ஜி ஆர். ஓர் சீர்திருத்தச்சிற்பி — பூமாலை, கொடைவள்ளல்! மக்கள் திலகம் என்று முழங்கினார்கள் பலர்!

சிவப்புக் கறுப்புக் கொடிகள் மண்டபத்தில் பறந்து கொண்டிருந்தன. அதற்கிசைய பேச்சாளர்கள் சிவப்புகறுப்பு தலைவரையோ தம் கலைவிழாவைத் தேசிய ரீதியில் தயாரித்து அளித்தவர் 'மாஜு' ஆல்ரவுண்டர் 'மாஜு'வை பற்றி பலமுறை "கலையரங்கத்தில்" குறிப்பிட்டிருக்கிறோம். அடிக்கடி ஏதாவது புதுமைசெய்து கொண்டிருப்பார்.

வானொலி வென்றும் என்ன - பத்திரிகை என்றும் என்ன மேடை நாடகம் என்றும் என்ன - இந்த 'மாஜு' இருப்பார்! இவரது "டபல் எம் பேரர் மேடர்" புதுமை நாடகம் கொழும்பு வானொலியில் சமீபத்தில் ஒரு மணி நேரம் ஒலிபரப்பப்பட்ட இவரது 'இளநீர்க் கிளாஸ் திறீ' கேட்டவர்களுக்கு தெரியும் - நாடகமென்றும் எப்படி இருக்க வேண்டுமென்று 'மாஜு'விடம்படிக்க வேண்டுமென்று!

### கலைஞர்கள் இணைந்தனர்

2 ம் நாள் கலைவிழாவில் யாழ் நகர், மலையகம், கண்டி, பலாங்கொடை, புத்தளம், திருமலை, கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த கலைஞர்களையெல்லாம் ஒரே மேடையில் இணையவைத்தபெருமை

### 'பத்து'

தவ்வளரையோ, சட்டையையோ வேட்டுக்கொண்டு பேசினார்கள் அழகோ அழகு! சொன்னை வீரரின் தம்பி கவலைவலை!

முதல்நாள் நிகழ்ச்சியில் மறைந்த ஈழத்து எழுத்தாளர்கள் கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக அவர்களின் உருவப்படத் திறப்பு விழாவும் நடந்தது. முற்போக்கு எழுத்தாளர் திரு. வி. கந்தசாமி, மலையகக் கவிஞர் திரு. பி. ஆர். பெரியசாமி, மறுமலர்ச்சிக் கவிஞர் திரு. மஹாகவி, வானொலி மேடைக் கலைஞர் திரு. ஜெசரியோ பீரிஸ் சீர்திருத்தவாதி திராவிடக் கழக ஆகியோரின் உருவப் படங்கள் திறந்துவைக்கப் பட்டன.

### கலைவிழா

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கலை விழாவாகமிளிர்ந்தன. இக்கலைச்செல்லையாவின் 'ஆனந்தா புரடக்ஷன்ஸார்' கலைக்குழுவின் சார்பில் இந்த 'மாஜு'வையே சேரும்.

சக்தி என்றுமே சாகாதாரம் ஒடும்காலமிது. ஆணும் கையில் வாளை ஏந்தி வீரசாகஸம்புரிவேன்என்று குமுறுகவும் ஒரு பெண்மணி இருக்கிறார் என்பதை ஹெலன் குமாரி என்ற தமிழ் சினிமா ஜொலிக்கும் நட்சத்திரம் நிரூபித்துவிட்டார் இந்தக் கலைவிழாவில்! தமிழ் நாடக மேடையில் முதல்முறையாக தனது 'டபல் எம் பேரர் மேடர்'ரில் நடிக்கவைத்தவர் எம். எம். மக்கீன். தான் தயாரித்த கலைவிழாவில் வாள்சண்டை போட்டவைத்திருக்கிறார். இவருக்குப் பயிற்சி அளித்த பெருமை நீர்கொழும்பூர் முத்துலிங்கத்தையும், மகி செபஸ்தியாரையுமே சாரும்!

'மக்கள் திலகத்'தையும், அவரதுஅரிய கருத்துக்களையும் எமக்குத்தந்த நல்ல கலைவிழாவையும் அளித்த எம். ஜி ஆர். மன்றத்தினரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்

## சாதனை புரிந்துவிட்டது இளங்கலைஞர் மன்றம்!

பிறந்து ஓராண்டு பூர்த்தியாவதற்குள்ளாகவே "ஏழுநாள் இசைவிழா" ஒன்றைப் பிரமிக்கத்தக்கவகையில் சிறப்புற நடாத்திச் சாதனை புரிந்திருக்கிறது இலங்கை இளங் கலைஞர் மன்றம்!

இச்சாதனையின் நாயகர் திரு. பொன். சுந்தரலிங்கம்! —இந்த இசை விழாவின் பின்னணியில் பக்கபலமாக நின்ற 'சுத்துத் தங்கப்பதக்கம்' இளங்கலைஞர்களுக்கு ஊக்க 'டானிக்' அளித்த பெருமையை வர்த்தகத் துறையிலும், மருத்துவக் கலைத்துறையிலும் சிறப்புற விளங்கும் சகீன்மார் பலர் இட்டுக்கொண்டனர்.

முழுதும் இளமிரத்தம் ஓடும் நிர்வாகக் குழுவைக் கொண்ட இம்மன்றம் நடத்திய ஏழுநாள் விழா இசை ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது. அனுபவம் இல்லாத ஆரம்பக் கலைஞர்கள் என்ற அறிமுகத்தோடு 'வெளுந்து வாங்கிய' பரிசில் பெற்ற இளங்கலைஞர்கள்-ஆடவரும் மகளிரும் இசை ரசிகர்களுக்குப் பெருவிருந்து அளித்தனர்.

'இந்த மன்றம் ஆரம்பமாகி நாலேநாலு மாதங்கள் தான் ஆகின்றன. இருந்தாலும் நாம் எதிர்பாராத வகையில் நிகழ்ச்சிகள் சிறப்படைந்துவிட்டன. நமது அகில இலங்கை இசைப் போட்டியில் நூற்றுக்கணக்கான இளந்தலைமுறையினர் பங்குபற்றியமை இசைத்துறைக்கு ஈழத்தில் நல்ல எதிர்காலம் உள்ள என்பதையே காட்டுகிறது!' என்று பெருமிதத்துடன் சொன்னார் திரு. பொன். சுந்தரலிங்கம்.

கலைஞர்கள் மட்டுமல்ல, ரசிகர்களுமே பெருகித்தான் வருகிறார்கள், என்பதை நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஏழுநாளும் சலிக்காது திரண்ட பெருமக்கள்

(11-ம் பக்கம் பார்க்க)





37வது மகாஜன சம்பத சீட்டிழுப்பு

ஏப்ரல் 30-ந் திகதி மாலை 5-15க்கு

பலாங்கொடை பொது மைதானத்தில் நடைபெறும்.

விசேட பரிசுகள்

203 ரொக்கப் பரிசுபெறும் டிக்கெட்டுகளுக்கு:

1. ரூபா 390/-க்கு மேற்படாத இறக்குமதிசெய்த கைக்கடிகாரம்
2. ரூபா 99/-க்கு 3 யார் இறக்குமதிசெய்த சாறிசட்டைத்துணி.
3. ரூபா 12/-க்கு 3யார் இறக்குமதிசெய்த பப்ளின்.
4. ரூபா 9/25க்கு 2 1/2 யார் இறக்குமதிசெய்த பப்ளின்
5. ரூபா 12/-க்கு இறக்குமதிசெய்த வேட்டி.
6. ரூபா 42/-க்கு இறக்குமதிசெய்த ஆர்ம் சில்க் வேட்டி, சால்வையுடன்.
7. ரூபா 20/-க்கு இறக்குமதிசெய்த வெள்ளைசாரம், அல்லது ரூபா 18/-க்கு இறக்குமதிசெய்த நிறச் சாரம்.

ரொக்கப் பரிசுபெறும் டிக்கட்டுகள் உள்ளடங்கிய எல்லா 100 இலக்கங்களுக்கும் [ரொக்கப்பரிசு பெறும் டிக்கெட்டுகள் தவிர]

1. ரூபா 20/-க்கு இறக்குமதிசெய்த வெள்ளைசாரம், அல்லது ரூபா 18/-க்கு இறக்குமதிசெய்த நிறச் சாரம்.

ரொக்கப்பரிசுபெறும் டிக்கெட்டுகளை உள்ளடக்கிய 100 தொடர் இலக்கங்களுக்கு; முன்னதாக வரும் 200 டிக்கெட்டுகள், தொடர்ந்துவரும் 200 டிக்கெட்டுகளுக்கு: (ரொக்கப்பரிசுபெறும் டிக்கெட்டுகள், ரொக்கப்பரிசுபெறும் டிக்கெட்டுகள் உள்ளடங்கிய 100 இலக்கங்கள் தவிர)

1. ரூபா 60/-க்கு மேற்படாத இறக்குமதிசெய்த சாறி ஒன்று.

[உதாரணமாக ரொக்கப்பரிசு பெறும் டிக்கெட் 22 K 000545 ஆக இருந்தால், 22 K 000501 முதல் 000600 வரையுள்ள 100 டிக்கெட்டுகளுக்கும் விசேட பரிசுகள் உண்டு. மேலும் 22 K 000301 முதல் 000500 வரையுள்ள எல்லா டிக்கெட்டுகளுக்கும், 22 K 000601 முதல் 000800 வரையுள்ள எல்லா டிக்கெட்டுகளுக்கும். ரூபா 60/-க்கு மேற்படாத இறக்குமதிசெய்த சாறி ஒன்று கிடைக்கும்]

இவ்விசேட பரிசுகள் யாவும், குறிப்பிட்ட கையிருப்பு முடியும்வரை, "முதல் வருபவருக்கு முதல் வழங்குதல்" என்ற அடிப்படையில் 72-05-03 முதல் 72-05-17 வரை (இரு தினங்களும் உட்பட) காலை 9-00 மணி தொடக்கம் பி. ப 3-00மணி வரை நிவாசி அடையாளச் சின்னங்கள் கொடுப்பதன் மூலம் வழங்கப்படும். ஒரு நபர் ஒரு தடவையில் ஒரு டிக்கெட்டையே கையளிக்கமுடியும்.

இன்றே! ஒரு மகாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி விசேட பரிசுக்கும் உரியவராகுங்கள்.

பரிசுக்குரியவர்கள் விசேட பரிசாகப் பெறும் பொருட்களை பெறும் இடத்தில் வைத்தே பரிசீலித்துக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். அவற்றில் ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அவற்றை உடனே திருப்பிக்கொடுத்துவிடவும். அவ்விடமிருந்து எடுத்துச்சென்ற பொருட்கள் பின்னர் திருப்பி ஏற்கப்படமாட்டா. கட்டிடத்திலிருந்து எடுத்துச்சென்ற பின் பொருட்களில் காணப்படும் சேதம் அல்லது பழுதுக்கு சபை பொறுப்பானதல்ல.

இவ்விசேட பரிசுகளை வாங்குவதற்கு தேசிய லொத்தர் சபை அந்நியச் செலாவணி எதையும் பயன்படுத்தவில்லை.

தேசிய லொத்தர் சபை

# வைத்திய ஒளி

'உற்றானவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்''

மந்திரக்காரன் மேடையில் தோன்றுகிறான்! 'ஓ மாதாளவைரவி' என்றெல்லாம் சொல்லிவிட்டு ஒரு மூலையில் அடிக்கிறான் தன் கைப்பிரம்பால் அவன் ஆடையில் காணப்பட்ட பெண் நாரியைப் பிடித்துக் கொண்டு ஐயோ என்று அலறுகிறான். அவன் அங்கும் இங்கும் திரும்பமுடியாமல் கஷ்டப்படுகிறான் இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்து ''அடபாவமே!'' என்று நாமும் அனுதாபப்படுகிறோம். இது படத்திரையில் இக்காலம் நடக்கும் சம்பவம் நிசமாகவே நாரிப் பிடிப்பு (இடுப்பு வலி) ஏற்பட்டால் அந்த மந்திரக்காரனே ஒரு நல் வைத்தியரை நாட வேண்டியதுதான் ஆகவே இப்பூவுலகில் மானிடரை அல்லற்படுத்தும் சாதாரண வியாதிகளில் ஒன்று இந்த இடுப்புவலி வியாதியைப் பற்றி வைத்தியர்கள் மாத்திரமல்ல சாதாரணமக்கள் கூட அறிந்தாகவேண்டியதாகவின் இது குறித்துச் சிறிது சற்று ஆராய்வோம்.

ஆய்வு

முதுகின் கீழ்ப்பாகத்திலும் இடுப்பிலும் சடுதியாய் அநேகருக்கு வாய்வு வந்து பிடித்துக் கொண்டு குனியவும் நிமிரவும் முடியாமல் கன் வலிந்துக் சரீரமுள்ளவர்களைத்தான் அதிகம் கொந்தரவு பண்ணுவதுண்டு, சடுதியாய்க் குளிர்காற்று உடம்பில் பிடித்தாலும் அல்லது அதிக தூரம் நடந்தபின் இடைவேர்த்திருந்தாலும் சில வாய்வுப்பதார்த்த உணவுகளைச் சாப்பிட்ட பின்னும் இந்த வாய்வுப் பிடிப்பு வரக் கூடும். முதுகெலும்பின் கீழ்ப்பாகத்தைச் சேர்ந்த நரம்புக் கூட்டம் பெலவீனப்பட்டாலும், இடுப்பும் இடுப்பைச் சார்ந்த தசைகளுக்கு இரத்தோட்டமும் பிராணவாயுவின் பிரயோசமும் தடைப்பட்டாலும் சிலருக்குப் பிருக்கங்கள் அல்லது குண்டிக்காய்கள் சரிவர வேலை செய்யாவிட்டாலும் இடுப்புவலி ஏற்படலாம். அதிக நேரம் உட்கார்ந்து இருந்து வேலை செய்பவர்களுக்கும் உண்டுபடுவதுண்டு.

## சிகிச்சை முறைகள்

### வெளிப் பிரயோகம்

1 நோயாளியை உடனே படுக்கையில் வைத்து நன்றாக முறைப் 'பாமிகல்' அல்லதுகூடன் அரை அவுன்ஸ் மூன்று அவுன்ஸ் தேங்காயெண்ணெயில் வெதுப்பிய கற்பூரத் தைலம் தேய்த்து ஒரு 'விளனல்' துணியால் இடுப்பைச் சுற்றி வைப்பது நல்லது. நல்ல அனுபவமுள்ளவர்களைக் கொண்டு உடம்பு பிடிப்பித்து விடுதலும் நலமாகும்.

## நாரிப்பிடிப்பு

கொண்டு உபத்திரவம் கொடுக்கிறதுண்டு இவ்வகை வாய்வுப் பிடிப்பு எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் உண்டாகலாம். ஆனால் விசேஷமாக குளிர்காலத்திலும் மழைகாலத்திலும் குளிர் சம்பந்தமான வாய்வினாலும் தாதுப் பெலவீனத்தினாலும் உண்டாகும் அத்துடன் நாள்கடந்தாக இடுப்புவலியும் உண்டுபடும் கொஞ்சம் அசைந்தால் அல்லது சற்றுத்திரும்பினால் கூட தாங்க இயலாத வலியுண்டாகும். இவ்விதமே வாய்வுப் பிடிப்பு அல்லது இடுப்புப் பிடிப்பு வலி என்று சொல்லப்படும் நாள்பட்ட சந்து வாதத்தில் இடுப்புவலி ஏற்படுவதுண்டு.

இடுப்பு நோய் இடுப்பிலிருந்து அநேகமுறையாகக் குத்தல் காணுகின்றது. நோயாளி மிகுந்த வருத்தமின்றிச் சரியாக நிமிர்ந்து நிற்கமாட்டான். சயனத்தில் வருத்தப்படுவான்' வியாதி இடுப்பு மூட்டிலிருக்குமாகில் சியேடிக்கா (Sciatca) என்று பெயர்.

காரணம்

முதுகைச் சோதனை பண்ணிப் பார்த்தால் விக்கமிராது. ஆனால் அஜீரணமும், மலச்சிக்கலுமிருக்கலாம். நாக்கைப் பார்த்தால் அதில் வெள்ளை படர்ந்திருப்பதை அவதானிக்கலாம். வாய்வுப் பிடிப்பு வாத அபினே தேகிகளையெண்ணைய்க் கரைத்த நாரியில் தேய்த்துவிடுதல் நல்லது.

கடுகு, வேர்க்கொம்பு, சிறுமுருக்கைப் பட்டை, பெருங்காயம் வகைக்கழஞ்சு ஒன்று. செத்தல் மிளகாய் ஒன்று இவற்றை நீர் விட்டு விழுதுபட அரைத்து உஷ்ணமாகக் காய்ச்சாதி திக் கொதிப்பித்து ஒரு கரண்டி சாராயம் விட்டு குழைப்பிப்பிடிப்புள்ள இடத்தில் பூசலாம்.

கடுகு உள்ளி வேர் கொம்பு உப்பு பிரண்டை தேங்காய்ப்பூ வாதமடக்கி வேர் வாதமடக்கி இலை மாவிலங்கை வேர் எருக்கிலம் வேர். எருக்கிலம்பூ, வகுத்த செட்டை இவற்றை ஒரு நிறை ஓர் அளவெடுத்து உரலில் இடித்துப் பொட்டணம் கட்டி புட்டவியலாய் அவித்து ஒற்றணம் கொடுக்கலாம்.

### உட் பிரயோகம்

1 அசுவகந்தி நற்சிரகம் திரிகடுகு ஏலம் சிரகம் வகைக்குப்பலம் ஒன்று வெதுப்பிப் பொடித்து தேன் நெய் வகைக்குப் படிசால் விட்டு லேகியம் கிண்டு கொட்டைப் பாக்குப்பிரமாணம் கொள்ளத் தீரும்.

காலமறிந்து வாய்வுப் பேதி கொடுத்து உதவவேண்டும். உள்ளிப் பூடு போட்டவித்த அரிசிக் கஞ்சி பாவிக்கஞ்சி கொடுக்கலாம். ஆராஞ்சுப் சளிக்குஞ்சு, புறா கிருத்தும் சிறந்தது.

சித்த வைத்தியர்
ம. யோஸ். சின்னத்துரை

# இராஜ ராஜன் கட

# இராஜ ராஜேச

[பேரரசர் இராஜராஜ சோழனின் உருவச் சிலை ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி இம்மாதம் 15-ந்திகதி தஞ்சாவூரிலுள்ள பெரிய கோயிலின் வெளிப் புறத்தில் அமைக்கப்பட்ட மண்டபம் ஒன்றில் திறந்து வைத்தார்.]

## செய்தியின் பின்னணியில்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த சோழ மன்னர்களில் இராஜ ராஜன் பத்தாவது சோழனாவான். இவன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனின் இளைய மகன். இவனது இயற்பெயர் அருண்மொழித் தேவன். பட்டப் பெயர் இராஜ கேசரி. விருதுப் பெயர்கள் பலவுண்டு தில்லைவாழ் அந்தணர்களால் இவனுக்கு சூட்டப்பட்ட பெயரே இராஜ ராஜன். இவன் செங்கோலோச்சிய காலம் கி. பி. 983 முதல் 1013 வரையாகும்.

ராஜராஜன் சோழ சாம்ராஜ்யத்தை வலுப்படுத்தி விரிவாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். தன்னுடைய காலத்தில் சென்னை ராஜதானி முழுவதையும் தெற்கு பம்பாய் மாகாணத்தையும் இலங்கையையும் தனது ஆட்சிக்குட்படுத்தினான் இவன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகளை ஒத்த கட்டடங்களை இன்றும் பொலன்னறுவை சிவன் கோயில் போன்ற இடங்களில் காணக் கூடியதாயிருக்கிறது.

இவனுடைய பெயரை எப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் தஞ்சாவூரிலுள்ள பிருகதீஸ்வரன் கோயிலான இராஜராஜேச்சரம் சோழத் தமிழ்க் கலைக்கு சிகரமாக விளங்குகிறது. இதனைக் கட்டுவதற்குக் காஞ்சிபுரத்திலிருந்து சேமவர்மா என்னும் சிற்பாச்சாரியை அரசன் தருவித்தான், சோமவர்மா சிறந்த சிற்பி மட்டுமல்ல. ஒரு தீர்க்க தரிசியும் கூட. தஞ்சாவூரின் பிற்கால நிலைமைகளை அவன் முன் கூட்டியே தெரிந்து கொண்டவன் போல, கோயில் கிடாணத்திலேயே சோழர், நாயக்கர், மராட்டியர், ஆங்கிலேயர் இவர்களின் சிற்பங்களை செதுக்கி வைத்தான்.

இக் கோயிலின் கோபுரம் 200 அடி உயரமானது. இதன் உச்சியிலுள்ள சிகரம் 25 சதுர அடி கொண்டதனிக் கல்லாலானது இவ்வளவு பெரிய கல்லை அந்த உயரத்துக்கு எப்படித் தூக்கி வைத்தார்கள் தெரியுமா? கோயிலுக்கு நான்கு மைல் தூரத்திலிருந்து கோபுரம் வரைக்கும் மெதுவாகச் சரிந்து போகும் ஓர் அகலமான வரம்பை அமைத்து, அதன் மீது உருட்டிக் கொண்டே கல்லை 200 அடி உயரத்துக்கு கொண்டு போனார்கள்.

இராஜ ராஜேச்சரம் கட்டி முடிய 12 ஆண்டுகள் பிடித்தன.

இக் கோயிலிலுள்ள நந்தியும் ஓர் அற்புதமான வேலைப்பாடு இதன் நீளம் பத்தொன்பதரை அடி. உயரம் பன்னிரண்டடி. அகலம் எட்டேகாலடி. இதுவும் ஒரே தனிக் கல்லில் செதுக்கப்பட்டது.

கோயிலின் வெளிப்புறத் திருப்பணி வேலைகள் யாவும் முடிந்த பின்பு உள்ளே லிங்கத்தை பிரதிஷ்டை செய்யும் போது ஒரு பிரச்னை எழுந்தது. லிங்கத்தைவிட ஆவுடையார் வடிவம் பெரிதாயிருந்தமையால் மருந்து இளகிப் பத்தலாக மதிப்போயிற்று. இதைக் கண்ட இராஜராஜன் மனம்

வழிப்போக்கன்

வருந்தியபோது, "பொதிகை மலையில் வசிக்கும் கருவூர்த் தேவர் என்ற சித்தரை அழைப்பித்தால் இது ஒப்பேறும்' என்று கூற அவரை எப்படி தஞ்சைக்கு தருவிக்க



# தவறணை

## முத்தரும் சித்த

முத்தர்: மெய்யே சித்தன்னை மரவரிமுறை நீக்கி தவறணை முறை வரப்போகுதாமே, இனி எங்கடைபாடு வாழ்க்கைக்குத் திருமுழுக்குப் போடவேண்டியது தான்.

சித்தர்: மெய்தான்காணும் முத்தர் வைகாசியிலை தவறணை வந்தால் பத்துப்பதினைந்தெண்டு வாழ்க்கையாய் குடிக்கிற நாங்கள் என்ன செய்யிறது.

முத்: எங்கள்பாடும் வயிறடிதான், கள்ளுக் கொள்ளா வயிறுமில்லை' முன்னுக் கொள்ளா வேலியுமில்லை யெண்டமாதிரி எங்களுக்கு பத்துப்பதினைந்தெண்டு வாழ்க்கை வைச்சுப் பத்திரப்படாமல் இருக்குது. அந்த முறையிலை எங்களைப்போல முட்டிக்கணக்கிலை வாங்கிற ஆக்களெல்லாம் கள்ளை மூக்குமுட்ட வாத்துப்போட்டு தொழிலை இல்லாமல் சோம்பேறிகளாகத் ஒருபுற மிருக்கவிட்டிலையுள்ள குஞ்சு குருமன் கூட கள்ளுக்குடிக்க பழகிவிட்டுதுகள். இதுகளெல்லாம் திருந்தி நல்லவழிக்கு வரவேண்டுமெண்டால் தவறணை வந்தால்தான் சரிவரும்காணும்.

சித்: நீர் சொல்லிறதொரளவுக்கு விளங்குதுகாணும். ஆனால் மரவரி இருக்கேக்கை வெண்டால் ஆண்பனைக்கு இரண்டரை ரூபாயும் பெண் பனைக்கு பத்து ரூபாயும் கட்டிப்போட்டு முட்டியையும் வாங்கிக்குடுத்து கந்தப்பனையை சீவி போத்தல் கணக்கிலை கள்ளைத் தா வெண்டு கந்தனிடத்தில் சொல்லவேண்டியது தான். தேவையான கள்ளை வீட்டிலை வைச்சுவிட்டுப் போறான். அதுக்கும் வழியில்லாவிட்டால் பத்துப்பனையை சீவ' பனைக்கு ஒண்டைத்தாவெண்டு சொன்னாலும் ஒரு நாளைக்குப் பத்துப்போத்தல் கள்ளாகுது. இதுக்கும் ஒத்துவராவிட்டால் கந்தனிட்டையே வாடிக்கையை வைச்சுக்கொள்ளுறது. தேவையானதைக் குடிக்கிறது. மாதம் முடிய கணக்கைப்பார்த்து ஏதோ கிடக்கிற காசைக் குடுக்கிறது. மிச்சத்தை ஆறுதலாகக் குடுக்கலாம். அதோடை கையிலைக்கு ஐம்பது சதம் கிடைக்குமே? வாடிக்கையாய் குடிக்கிற எங்களுக்கு ஒரு போத்தல் நாப்பது சதந்தானே விழுகுது. அதுமட்டுமே மங்குனி சித்திரை மாதமெண்டால் வாடிக்கைக்குப் பதினைந்து சதந்தானே. தவறணை வந்தால் இந்தச் செல்லாக்கெல்லாம் கிடைக்குமே. அதுமட்டுமே சில கள்ளுக்கொட்டில்களிலை சோடிக்கு ஒரு சுருட்டும் என்று 'போடு' பண்ணை தூக்கும். ஆனா- நாங்கள் அங்கை சோடியாய் போகவேணுமெண்ட அவசியமில்லை. அந்தக்கொட்டிலிலை போய் இரண்டுபோத்தல் கள்ளு வாங்கினால் ஒரு சருட்டும் சும்மா கிடைக்கும். இப்படியான செல்லாக்கெல்லாம் கிடைக்கையிக்கை தவறணை வந்தால் காசு ஒரு கையிலை குடுத்தால்தான் மற்றக்கையிலை கள்ளுவரும். அங்கை கடன் வாடிக்கை எண்டபேச்சுக்கேஇடமில்லை

முத்: அதுசரி காணும் சித்தர் உதைப்பற்றி உவ்வளவிலை புழுகியடிக்கிறீர், நான் வண்டைக்கொருநாள் காசை முடிச்சிலை கட்டிக்கொண்டு ஒருபோத்தல் கள்ளுக்குடிப்பமெண்டு நிறவாதவிட்டுப் படலையுமில்லை இறக்காத படலை வகிர்சுமில்லை, கைட்சியாய் கள்ளுக்குடிச்சபாடுமில்லை கள்ளுக் கிடக்குமோ வெண்டு கேட்டால் ஆர வாடிக்கைக்காறருக்குத்தான் கிடக்கும். பாத்த அரைவாசிக் காலைப் பாக்கலாமோவெண்டு கேட்டன், கள்விக்கிலையெண்டான் அரையும் காலும். கள்ளுக் கடன்னை வாயிலிருந்து வெடித்ததுகுண்டு தவறணை வந்தாக்செல்லாக்காய் முடிச்சிலை முடியவேண்டியது. தவறணையிலை போய் முடிச்சை அவிட்டு ஒரு விசுக்கு! தவறணைகாறன் சாடியிலைகிடக்கிற கள்ளை அளவுத்தாலை ஒரு கலக்கு கலக்கிப்போட்டு பிளாவிலைவிட வாங்கி ஒரு இழுவையாய் இழுக்கவேண்டியது. வரயுக்கைதார் ரோட்டிலை போட்டுக்கள்ளுக்செவ்வையாய் இருக்குதோவெண்டு பதம்பார்த்துக்கொண்டு வேண்டியதானே. காசு கிடைத்தால் தானே தவறணைக்குப் போகலாம் காசு இல்லாவிட்டால் அவரவர் சிவசிவ சம்போ வழியிலை ஜிம்போ எண்டு பேசாமல் கொட்டாவிவிட்டுக் கொண்டு படுக்க வேண்டியதுதானே. உது மட்டுமே

சித்தன்னை என... இருக்கிற... அவன் பள்ளிக்... வற்றவுடனே... டையை தூக்கி... வைச்சுக்கொண்டு...

[முத்தரும் ... சேர்போன கள்ளுக்குடிக்க... லுக்குப் போ... தில் சந்தித்த... கிற மேயிலிரு... வரிமுறைநீங்கி... முறை வருவத... டம்போகும் ... தையும் அதனு... வாடிக்கைமுறை... போகுதென் ... பற்றி வெறியில்... கதை.]

பாலே வெளிக்கிட... வரயுக்கை இரண்... டான் இராப் ப... குப் பிறகு ... சாப்பாட்டை திண்டிட்டுப் ... எனக்கு இது ... ஆனால் நான் மாதிரி இருக்கிற... நிமிர்ந்த பெ... இந்தக் காலத்தி... கதைக்கிறது ம...

# நகை : பெண்களின் இன்சூரன்ஸ் பாலிஸி!

பெண் படிக்காதவளாக இருந்தால் எவனையும் மணக்க அவள் சம்மதிப்பாள். படித்து நாகரிகம் பெற்றவளானால் இயற்கையாகவே தன்னைப்போல மாப்பிள்ளையையே விரும்புவாள்.

— சாந்தி [illegible]

ஆதிகாலத்தில் நாகரிகம் அறியாத மக்கள் தங்களைச் சிப்பி, கிளிஞ்சலின் கல், தந்தம், நகம் இவற்றால் அலங்கரித்துக்கொண்டார்கள். தங்கள் வேட்டைச் சாதனைகளின் சின்னங்களாகவே இப்படி இவர்கள் அணிந்திருக்கலாம். பிறகு காரணம் விளங்கமுடியாத பல தற்செயல் நிகழ்ச்சிகளால் கண்மூடி நம்பிக்கைகள் உதித்தன. விலங்குகளின் தந்தம், நகம் போன்ற பொருள்களும் வைரம், முத்து, பவளம் பிற ரத்தினம் போன்ற பொருள்களும் தெய்வீக சக்தியுடையவையாக மக்களுக்குத் தோன்றியிருக்கலாம்.



### முதன் முதல் தங்கம்

உலோகங்களுள் முதன் முதல் தங்கத்தைத்தான் இஷ்டப்படி வேலைசெய்து உருவாக்க மனிதன் கற்றிருக்கிறான். அதில் வேலை செய்வது எளிது. எனவே, தங்கத் தகடுகளையும் கம்பிகளையும் தட்டிக்கொட்டியே அச்சுத் தொழிலில் இழைத்தோ தயாரித்து அவற்றைப் பின்பு விரும்பியபடி பின்னி அல்லது உருவாக்கி முத்துச் சங்கிலி கிரீடம் முதலிய அணிகளை அரிய முறையில் செய்யலானார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி வாழ்ந்த இரண்டாவது மெனுசெஸ்ட் என்ற எகிப்திய மன்னனின் 'பிரமிட்' கோபுர சமாதியில் இத்தகைய மகா அற்புதமான கிரீடம், சங்கிலி இவற்றைப் பல ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்தார்கள். அவற்றின் 'டிஸைன்' நுணுக்கமும் வேலைப்பாடும் யதார்த்தமானவை என்று புகழ்கிறார்கள்.

ஆனால், இந்தியாவை அன்றிப் பிறநாடுகளில் ஆபரணங்களில் நவரத்தினங்களை அதிகமாக முன்பெல்லாம் பதிப்பதில்லை. அப்படி ஏதோ சில ரத்தினங்களைப் பதிப்பதானாலும், அவற்றைப் பட்டைதீர்ப்பதேயில்லை. வைரம்போன்ற கற்களை அழகழகாய்ப் பட்டை செய்து நகைகளில் பதித்து டால் வீசச்செய்யும் கலை வெகுகாலமாகவே இந்தியர்களுக்குக் கைவந்தது.

### ராமாயணகாலத்திலிருந்தே...

ராமாயண காலத்திலிருந்தே கணையாழி புழக்கத்திலிருந்து வருகிறது. திருமணத்தில் மணமகளும் மணமகனும் மாற்றிக்கொள்ளும் அடையாளமாக விளங்கும் மோதிரம் அரசர்களின் முத்திரையாகவும் விளங்கியிருக்கிறது. நச்சு மோதிரம் புலிநக மோதிரம் இவற்றைத் தற்பாதுகாப்பு ஆயுதமாகச் சிலர் உபயோகித்ததும் உண்டு.

அதெல்லாம் எப்படியோ, பெண்களும், மன்னர்களும் பிரபுக்களும் நகைகள் அணிவது நாகரிகமாகத் தொடக்கத்திலிருந்தே ஒரு வழக்கமாகி வந்திருக்கிறது. ஆண்கள் நகை அணிவது குறைந்தாலும், பெண்கள் - அதிலும் இந்தியப் பெண்கள் இன்றும் பலவித நகைகளில் மோகம் கொண்டு, அழகை அதிகரிக்கச் செய்து அதை அழகாக்கி விடுவதாக மயங்கி அணிகிறார்கள். நகைகளை எதிர்ப்பவர்களுக்கு நகை ஆதரவாளர்கள் ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள். ஆதாவது, நகைகள் பெண்களுக்கு ஓர் இன்சூரன்ஸ் பாலிஸி— வாழ்க்கைச் சேமநலப் பாதுகாப்பு-மாதிரி உதவுபவை என்பது அவர்கள் தரும் மறுமொழி.

### நகைகள்

இதோ சில பழமையான நகைகளை அறிந்து வைத்திருக்கள்:- மாட்டல், லோலாக்கு, பதக்கம், ராக்கடி, திருகுப்பூ, மாங்காய், நெளி, வங்கி, மோதிரம், சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, சங்கிலி, முத்துச்சரம், குஞ்சலம், ஒட்டியாணம்.

## பெண்ணின் பெருமை!



எல்லா விதத்திலும் பெண்கள் தாம் ஆண்களைவிட உயர்ந்தவர்கள் சற்று யோசித்துப் பார்த்தால் இது நன்கு விளங்கும். 'வீட்டுக்கு வந்த லக்ஷ்மி' என்று புதிதாக வரும் மருமகளை வரவேற்கிறோம். ஆனால் புதிதாக வரும் மாப்பிள்ளையை 'வீட்டுக்குவந்த மகாவிஷ்ணு' என்று கூறுவதில்லை. உடைவிஷயத்தில் ஆண்களுக்கு நான்கு முழம் போதும். 'உடுப்பது நான்கு முழம்' என்பது ஔவையார் வாக்கு. ஆனால் பெண்களின் உடை பதினெட்டு முழம், அல்லது தற்கால வழக்கப்படி ஆறு கெஜம்.

தெய்வீகக் கல்யாணங்களை எடுத்துக்கொண்டு பெண்களின் பெருமையைச் சீர்தூக்கிப்பார்த்தால் அதுவும் அவர்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. சீதா கல்யாணம், வள்ளி கல்யாணம், பார்வதி கல்யாணம், பரமசிவன் கல்யாணம், முருகன் கல்யாணம் என்று சொல்கிறதில்லை. இன்னும் பார்ப்போம். சிவனுக்கு ஒரு ராத்திரி— அது சிவராத்திரி. ஆனால் அம்பாளுக்கு நவராத்திரி.

- கிருபானந்தவாரியார்




# குழந்தைகளை ... வற்புறுத்தலாமா?

குழந்தைகளை ஓரளவு கட்டுப்படுத்தவேண்டியது அவசியம்தான். இதற்காகச் சதா அவர்களை வற்புறுத்திக் கொண்டும் கண்டித்துக் கொண்டும் இருப்பது அவர்களின் முன்னேற்றத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் ஆபத்து விளைவிக்கும்.

### வற்புறுத்தலால்...

சில பெற்றோர் குழந்தைகளை நிறையச்சாப்பிடவேண்டும் என வற்புறுத்துவார்கள். அவை வயிற்றுக்குவேண்டியதைத் தாமே சாப்பிடும். உடம்புக்கு இயற்கையில் ஏற்றுக்கொள்ளாத உணவை அளித்தால் குழந்தை மறுத்துவிடும்.

வற்புறுத்தி ஒரு பழக்கத்தை உண்டாக்க முயன்றால் குழந்தைக்கு சிடுசிடுப்பு, வீண்பிடிவாதம், பெற்றோர் மீது வெறுப்பு முதலிய கோளாறுகள் ஏற்பட்டுவிடும்.

குழந்தைகளைத் தாய் நிதானமாகச் சாப்பிடும்படி பழக்கப்படுத்தவேண்டும். அவசர அவசரமாக அள்ளிப்போட்டுக்கொள்வதை அனுமதிக்கக்கூடாது. உணவுப் பொருள்களை நன்கு மென்று தின்னும் வழக்கத்தை ஏற்படுத்துவதுடன் உண்டபின் வாய் கொப்பளிக்கவும் செய்யவேண்டும்.

குழந்தைகள் விரைவாகவே தாங்கள் சொல்வது எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும் எனச் சில பெற்றோர்கள் எண்ணிக் குழந்தைகளைக் கஷ்டப்படுத்துவார்கள். குழந்தைக்கு ஒவ்வொரு பருவம் உண்டு. அந்தந்தப் பருவம் வந்தபின்பு தாய் சற்று உதவிசெய்தால் போதும். ஒரு தொல்லையும் இல்லாமல் அந்தப் பழக்கம் தானாக வந்துவிடும்.

### தூக்கத்தில் இருக்கும் குழந்தையை...

பெற்றோர் சிலர் தூக்கத்தில் இருக்கும் குழந்தையைத் தாங்கள் தேவைகளுக்காகத் திடீரென எழுப்பி விடுவார்கள். இப்படிச் செய்தல் தவறானதாகும். குழந்தைகள் கண்விழித்தவுடனேயே படுக்கையில் இருந்து எழுந்துவிடமாட்டா. சற்று நேரம் அப்படியேபடுத்திருக்கும். தூங்கும்போது மாறுபட்டிருக்கும் ரத்த ஓட்டமும், இதயத்துடிப்பும் சகஜநிலைக்குவர சற்றுநேரம் ஆகும். அதனால்தான் அப்படிப் படுத்துக்கொண்டிருக்கின்றன. 'சட்'டென்று எழுந்து உட்கார்ந்தால் படபடப்பு வரும். எனவே உடனே எழுந்திருக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டாம்.



குழந்தையைக் கவனமாக வளர்ப்பதாக எண்ணி அதற்குத் தேவையானதை அது கேட்காமலே விட்டு உடனுக்குடன் செய்துவிடுவதால் சில குழந்தைகள் பேசக்கற்றுக்கொள்ள வாய்ப்பே கிடைக்காது. இதனால் அவை பேசத் தொடங்க நாளாகும்.

- [illegible]

# வாழையிலையில் உண்ணுவதால்...

தற்போது நாம் எல்லோரும் கோப்பையில் உண்ணும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. முன்னுள்ளவர்களுக்குக் கோப்பை எது தெரியுமா? வாழையிலையே ஒரு கோப்பை.

### வாழையிலை

சேர் பொன் ராமநாதன் இங்கிலாந்தில் ஒரு சமயம் உரையாற்றும்போது வெள்ளைக்காரர்களாகிய நீங்கள் தினமும் ஒரே கோப்பையில் உண்கிறீர்களே. நாங்கள் உங்களைப்போல அல்ல. இன்று சாப்பிட்ட கோப்பையை உடனே எறிந்து விடுவோம். மறுமுறை சாப்பிடும்போது இன்னுமொரு கோப்பையிலேயே சாப்பிடுவோம். பின் அதை வீசி எறிவோம். என நகைச்சுவையாக வாழையிலையின் பெருமையைக் குறித்துப்பேசினார். நம் முன்னோர் இந்த வாழையிலையில் சாப்பிடும் வழக்கத்தைப் பண்பாடாகவே அல்லது நாகரிக பழக்கமாகவே கொள்ளவில்லை. அதனுடன் உடலுக்கு இனிக்கும் நல்ல பலனை வைத்தே அவர்கள் வாழையிலையில் சாப்பிடும் வழக்கத்தைக் கைக்கொண்டுவந்தார்கள்.

வாழையிலையில் தினமும் உணவை உண்பதால் உடல் மினுமினுப்பு பெறும். நல்ல ஆரோக்கியத்தையும் அழகையும் பெறலாம்.

### வாழைப்பட்டை

இது மாத்திரமல்ல அக்னி மாந்தம் ஆகியவற்றைப் போக்கும். பித்தம் தணிக்கும், கண்களுக்குப்பிரகாசம் உண்டாக்கும் என்கிறார்கள் சித்த வைத்தியர்.

வாழையிலைதான் இத்தகைய சக்தியுடையது என்றால் நாம் வீசி எறியும் வாழைப்பட்டையும் நல்ல பயன்களை தருகிறது. மயக்கத்தைக் கொடுக்கும் அபின், கள், சாராயம் போன்ற போதைப் பொருள்களை அருந்தி அதால் மயக்கமேற்பட்டுத் தவிப்பவர்களுக்கு இந்த வாழைப்பட்டையைப் பிழிந்து அந்தச் சாற்றைக் கொடுத்தால் இவர்களின் மயக்கம் உடனே நீங்கிவிடும். நெருப்புச்சுட்ட புண்ணுக்கும் இந்த வாழைப்பட்டை கைகண்ட மருந்து. இதன் சாற்றை தீக்காயம் பட்ட இடத்தில் ஊற்றினால் அது குளிர்ச்சியைக் கொடுத்துக் குணமாக்கும்.

## மணிமொழி

தற்காலிகச் சுகபோகங்களுக்காக நாம் நம்முடைய ஒழுக்கத்தைப் பழுதாக்கிக் கொள்ளலாகாது. வாழ்வின் இன்பம் பெறுவதற்குரிய வழி நம்முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதேயே பொறுத்ததாகும். ஒழுக்கம் தவறினால் அதை எளிதில் பழுதுபார்க்க முடியாது.

0 0 0

நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

0 0 0

நாம் கஷ்டப்பட்டு மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்திசிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது. ஆசை இருந்தால் மட்டும் போதாது லட்சியத்தில் பக்திவேண்டும், பெரும் முயற்சிகள் அனைத்துக்கும் சிரத்தை தேவை.



0 0 0

சம்பத்தை பிடித்துக் கொண்டு பையன் கிறகிறு வென்று சுழன்று சுற்றுகிறான். எத்தனை வேகமாகச் சுழன்றாலும் சம்பத்தைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு சுழலுகிறான். அதைப் போல் பகவானைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு உலக வாழ்க்கையில் சுழலுங்கள்.

— ராஜாஜி

## நூல்கள் எதற்கு?

'ஒரு பொழுதுகூடத் திறக்காவிடினும் சரி, ஒரு வார்த்தை கூடப் படிக்காவிடினும் சரி, நூல்களைப்போல வீட்டை அலங்கரிக்கும் அழகான பொருள்கள் வேறு கிடையா'

— ஸிட்னி ஸ்மித்

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

யாழ்ப்பாணம்

## ஈழநாடு

பரிதாபி வருடம் சித்திரை மாதம் 11-ம் திகதி (23—4—72)

## கிரகங்களும் மனிதனும்

கிரகங்கள் மனிதனை ஆட்டிவைப்பதாக சோதிட சாஸ்திரம் கூறும். ஆனால் இப்போது மனிதனே கிரகங்களை ஆட்டிவைக்கும் காலம் வந்துவிட்டதாகச் சிலர் கருதுகின்றார்கள்.

இப்போது சந்திரக் கிரகத்தில் மனிதன் ஐந்தாவது முறையாக இறங்கி நடக்கிறான். அங்கிருந்து சந்திரக் கற்களை எடுத்துக்கொண்டு பூமிக்கு உயிருடன் திரும்புகிறான்.

இதனால் சந்திரனுக்கு ஏதும் பாதகம் ஏற்படாதா? அல்லது சந்திரனுக்கு இந்தச் சமாச்சாரம் தெரியுமா? என்பது விளங்கவில்லை.

சந்திரனில் வெற்றிகரமாக மனிதனை இறக்கியபெருமையும் புகழும் அமெரிக்காவையே சேரும். ரஷ்யா சந்திரக்கற்களை கருவி மூலம் கீழே கொண்டுவந்துவிட்டதெனினும் மனிதனை இன்னும் அங்கு அனுப்பிவைக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவாயினும், அமெரிக்க-ரஷ்யப் போட்டிகள் நம் பூமியில் மட்டுமின்றி, சந்திரன் வரை எட்டிவிட்டதைப் பார்க்கிறோம்.

இவ்விரு வல்லரசுகளுக்கும் ஏற்பட்டுள்ள போட்டியால், உலகங்களுக்கு நன்மையைவிடத் தீமையே அதிகமென்று தோன்றுகிறது. வியட்னாம் மக்கள்படும் சங்கடங்கள், மற்ற நாடுகளுக்கும் பரவாமல் இருக்க வேண்டும்!

ஒருபுறம்சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் அமெரிக்கா மறுபுறம் வியட்னாமில் குண்டுகளைவீசி, நாசவேலைகளை செய்கின்றது. இதனால் அமெரிக்காவின் விஞ்ஞான சாதனையைப்பற்றி மகிழ்ச்சியடைய முடியாமலுள்ளது.

விஞ்ஞானம் மனிதவாழ்வை இன்பமயமாக்கப்பயன்பட்டாலே அது வரவேற்கப் பாராட்டத்தக்கதாகும். மனிதனை அழிக்கப் பயன்படுமாயின், அந்த விஞ்ஞான வளர்ச்சி ஒரு சாபக்கேடாகவே முடியும்!

## உண்மையா...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

"தெரிந்து கொண்டேன், காந்திமாஜி!" என்று உற்சாகமாய்க் கூறினார் தொண்டர்.

காந்தி மறைந்து காலாண்டாகிறது. ஆனால் ஸோஷலிஸத்தை வாழ்வில் கடைப்பிடிக்கும் முயற்சியைக் காணோம். அவருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு மேடையில் ஏறி ஸோஷலிஸத்தைப் பற்றிப் பேசுவதையே காண்கிறோம். இதைப்பற்றி எண்ணும்போது, மறுபடியும் கிறிஸ்து நாதருடைய நினைவே வருகிறது. "என்னை 'ஆண்டவரே!' 'ஆண்டவரே!' என்று அழைக்கிறீர்கள். அப்படி அழைத்தும், நான் சொல்லுகிறபடி செய்யாதிருப்பது ஏன்?" என்று அவர் தம்முடன் இருந்தவர்களைப் பார்த்துக் கூறினார்.

காந்தி உயிரோடு இருந்திருந்தால், அவரும் இப்படியே சொல்லியிருப்பார்.

போலி ஸோஷலிஸ்டுகளல்ல, 'பூஜ்ஜ' ஸோஷலிஸ்டுகள் அந்தத் தத்துவத்தைப் பற்றி மேடையில் பேசுவதை நிறுத்திக்கொண்டாலே போதும். அதுவே மக்களுக்கும் ஸோஷலிசத்துக்கும் [illegible]

## மே நடுப்பகுதியில் மந்திரி சபையில் மாற்றம்?

அரசாங்கத்திலிருந்து லங்கா ஸமஸமாஜக் கட்சி வெளியேறும் சாத்தியக்கூறு இருப்பதாகவும் ஜே ஆர் ஜெயவர்த்தன அரசாங்கத்தில் சேருவார் என்றும் இதற்கு ஏற்ற முறையில் மந்திரி சபையில் மே மாத நடுப்பகுதியில் மாற்றம் செய்யப்படலாமென அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது [ச

## சாதனை புரிந்த...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கொட்டும்முரசொலித்துமுழங்கிறது.

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்றார் பாரதியார். 'தெருவெல்லாம் இசைமுழக்கம் செழிக்கச் செய்வோம்!' என்று கிளம்பியிருக்கிறது இளங்கலைஞர் மன்றம்!

அதன் நோக்கம் வெற்றி பெறத்தான் செய்யும்!

—'வேணுகோபாலன்'

அவர்கள் செய்யும் பெரிய தொண்டாகும்.

(நன்றி: மஞ்சரி)

## சங்கத் தலைவருக்

[1ம் பக்கத்தொடர்ச்சி)

நன்மை ஏற்படாது' தனிப்பட்டவர்கள் ஏலமெடுத்திருந்தால் கள்ளின் விலை அதிகரிக்கும் இதனால் மது அருந்துபவர்கள் பாதிக்கப்படுவார்கள். இதனைக் கருதியே இப்பகுதியில் சங்கங்களுக்குக் கொடுக்கமுன்வந்தோம்.

கள் உற்பத்தி விற்பனைச் சங்கத்தலைவர், சேவையாளருக்கு ஓர் அலவன்ஸ் வழங்கப்படவேண்டுமென இங்கு கோரப்பட்டது. தற்போதுள்ள நிலையில் இது சாத்தியமாகாது. சங்கம் முன்னேறி நல்ல முறையில் நடைபெறும்போது இது பற்றி யோசிக்கலாம். ஆரம்ப நிலையில் இதுபற்றி எதுவும் செய்யமுடியாமலிருக்கிறது.

அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா பேசும்போது வடபகுதியில், கள் உற்பத்தி விற்பனை புள்ளிவிபரங்களின்படி சுமார் பகுதியினர் 8 மாதத்திற்கு 120 லட்சம் ரூபா பெறலாம் என தெரிவித்திருந்தனரென்றும், சங்கத்தின் நன்மை கருதி சுமார் 50 லட்சம் ரூபாதான் இவ்வருடம் பெறப்படுகிறதென்றும் கூறினார், தனிப்பட்டவர்களுக்கு ஏலத்தில் விட்டிருந்தால் 120 லட்சம் ரூபாவிலும் கூடவே பெற்றிருப்போமென்றும் குறைத்துக்கொடுத்திருக்கமாட்டோமென்றும் அரசாங்க அதிபர் மேலும் கூறினார்

பதில் நிதி அமைச்சர்களால் பகுதி உத்தியோகத்தர்களையும் கூட்டுறவு உத்தியோகத்தர்களையும் நேற்றுக்காலை சந்தித்து கலந்துரையாடினார்

## விண்ணப்ப—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குகிழக்குப்பிரிவு, தென்மராட்சி, வலிமேற்கு, வலி வடக்கு, தீவுப்பகுதி, பூநகரி ஆகிய காரியாதிகாரிப் பிரிவுகளில் தானே இவ்விண்ணப்பப்படிவ விநியோகம் ஆரம்பமாகிறது. மிகுதி 7 காரியாதிகாரிப்பிரிவிலும் இம்மாத முடிவுக்குள் விநியோகிக்கப்படுமென உதவி ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் சுமார் 4 லட்சத்து 78 ஆயிரத்து 978 பேர் பதிவுசெய்யப்படுவார்கள் என நம்பப்படுகிறது இவர்களைப்புகைப்படம் எடுப்பதற்கு 25 படம் பிடிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். படம் எடுப்பதற்கு ஸ்ருடியோக்களுக்குச் செல்ல வேண்டியதில்லை இவர்களை வாழும் இடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகள் சனசமூக நிலையங்கள்போன்றவற்றில் வைத்துப் புகைப்படம் எடுப்பதற்குவசதிகள் செய்யப்பட்டுள்ளன. புகைப்படம் பிடிப்பதற்கான நேரம் காலம் இடம் முதலியவற்றை அறிவித்து உறுதிப்படுத்த உத்தியோகஸ்தர்கள் தெரிவிப்பார்கள் என்றும், அதேமாக

## வீடுகள் திடீரென தீப்பற்றி எரிகின்றன

### மந்திரதந்திரமே காரணமாம்

(நமது நிருபர்)

வீடுகள் திடீரெனத் தீப்பற்றி எரிகின்றன. முதலில் புகைதோன்றி பின்ஜுவாலை விட்டு எரிகிறது பார்த்து நிற்போர் தண்ணீர் ஊற்றி அணைக்கின்றனர்; அரைமணி நேரத்தின்பின்மீண்டும் அவ்வீடுகள் தீப்பற்றி எரிகின்றன. இவ்வித ஆச்சரியம் கொடுக்கும் சம்பவம் சிதம்பரகணிப்பகுதியில் நடைபெற்றுள்ளதாக நிருபர் ஒருவர் அறிவிக்கின்றார்.

இச்சம்பவத்தில் ஏதோ மந்திரதந்திரங்கள் இருப்பதாக அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கின்றனராம். இவ்விதம் நேற்றுஇரவுவரை சுமார் எட்டு சலவைத் தொழிலாளர்களின் வீடுகள் தீக்கிரையாகியுள்ளன வென்று கூறப்படுகிறது.

ஒரு பெண்மணியின் குறைபாட்டால்தான் இவ்விதம் ஏற்பாடன் செயல் நடைபெறுவதாக அவ்வூரிலுள்ள மந்திரவாயர்களில் நம்பிக்கையுள்ள ஒருவர் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

(சுழி

## 4 கோடி பொருட்கள் இந்தியாசெல்லும்!

### அமைச்சர் இலங்கரத்தின தகவல்

கொழும்பு, சனி

4 கோடி ரூபாய் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்யுமென்று இன்று இந்தியாவில் இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தக பொருளாதார அபிவிருத்தி குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியபின்னர் நாடு திரும்பிய வர்த்தக அமைச்சர் திரு டீ பி இலங்கரத்தின வெளியிட்ட அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்

பாக்கு, கொப்பரு, சங்கு ஆகியன இந்தியாவுக்குச் செல்லும் 6 கைத்தொழில்கள் கூட்டு முயற்சி மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சனி ஞாயிறு மற்றும் ஓய்வு நாட்களிலேயே புகைப்படம் பிடிக்கப்படுமென உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் இலங்கரத்தின சத்தியாக்கோவில் நடந்த ஐ நா வர்த்தக கூட்டத்திலும் கலந்துகொண்டபின்னரே நாடு திரும்பினார்

## மரண அறிவித்தல்

### கந்தையா பரராசசிங்கம்

நல்லூர் 66/1, இராசாவின் தோட்டம்வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய அப்போதிக்கரி கந்தையா பரராசசிங்கம் காலமாகிவிட்டார். இவர் சாரதாம்பாவின் அன்புக்கணவரும், சுதாம்பகி, செல்வராசா, செல்வராசா, மனோரஞ்சினியின் தந்தையும், திருமதி கனகாம்பிகை சுப்பிரமணியத்தின் சகோதரரும், காலஞ்சென்ற சரவணமுத்து அட்சலிங்கத்தின் மருமகனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (23-4-72) மாலை 4 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

4136

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் கனகம்மா

சுன்னாகம், ஏழாலைமேற்கு, பிருந்தாவனத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினம் கனகம்மா நேற்று மாலை சிவலோகப்பிராப்தியடைந்தார். இவர் இளைப்பாறிய ஓவசியர் எஸ். இரத்தினம் அவர்களின் மனைவியும், இளைப்பாறிய ஓவர்சியர் மு சின்னத்தம்பி, சி செல்லாச்சிப்பிள்ளை இவர்களின் புதல்வியும், பாலசுப்பிரமணியம், திருமதி ச. பத்மாவதி இவர்களது சகோதரியும், உமாகாந்தன் செட்சுமிகாந்தன் திருமதி பா. நாகபூஷணி செல்வி மீனலோசனி ருக்மணிகாந்தன் கௌரிகாந்தன் ஸ்ரீகாந்தன் ரமாகாந்தன் தேவகாந்தன் கமலகாந்தன் இவர்களின் தாயாருமாவார்.

தகனக்கிரியை ஏழாலை மாவோலை மயானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு" [லிமிடெட் கிழானமாதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: